# நிருபர்கள் மீது காஷ்மீர் சர்க்கார் பாய்ச்சல்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.கழக இதழ் ஆசிரியர் : அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. The Official Organ Of The D.P.F.

தனி இதழ் : ஒரு அணா — சென்னை : ஆனி 1உ செவ்வாய் (15—6—54) — மலர் : 2

இலங்கையில் 10 சதம் — வெளியூர் : ஆனி 2உ புதன் (16—6—54) — இதழ் : 1

## தகவல் தரக்கூடாது என அதிகாரிகளுக்குத் தடை

### அடக்குமுறையில் அப்துல்லா சர்க்காரையும் மிஞ்சிடும் குலாம் சர்க்கார்

### காஷ்மீர் பத்திரிகை நிருபர்களின் கூக்குரல்;

'காஷ்மீர் சிங்கம் எனக் காங்கிரஸ் கட்சியினரால் போற்றிப் புகழப்பட்ட ஷேக் அப்துல்லா, அமெரிக்காவின் ஏவலாளியாக ஆகிவிட்டார் எனக் காரணங்காட்டி, தனிக் காவலில் தள்ளப்பட்டுள்ளார், காஷ்மீர் ராஜப்பிரமுகரான அரசரால்!

அவருக்குப் பதில், அவருடைய அமைச்சர் குழுவில் ஒருவராக இருந்த பக்ஷி குலாம் பிரதமரானார்; பண்டித நேருவின் பற்றுக்கும் பாசத்திற்கும் உரியவரானார்.

அப்துல்லா ஆட்சியில், பத்திரிகை உரிமைகள் பற்பல வகையில் பறிக்கப்பட்டுக் கிடந்தன. அவைகளை மாற்றி பத்திரிகை உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென, பலமாகக் கிளர்ச்சி செய்து வந்தனர் பத்திரிகை நிருபர்கள்.

குலாம் ஆட்சி ஏற்பட்டு பத்துத் திங்களாகியும், பத்திரிகைகளுக்கு அப்துல்லா இழைத்து வந்த கொடுமைகளுக்குப் பரிகாரம் இது வரை கிடைக்கவில்லை.

அப்துல்லாவையும் மிஞ்சிவிடும் போக்கில், பக்ஷி குலாம் போக்கு இருக்கிறது. பத்திரிகை உரிமையைப் பறிக்க அப்துல்லா ஏவிய அடக்குமுறை அமுலில் இருந்து வருவதோடு, பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கு முன்பாகவே, செய்திகளைத் தணிக்கை செய்ய வேண்டுமென்ற புதிய அடக்குமுறையை பக்ஷி குலாம் சர்க்கார் கடைமுறைக்குக்கொண்டு வந்து, காத்து வருகிறது.

அதனால், அதிகாரிகளின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்ட இதழ்கள், சொல்லொணா கொடுமைகளுக்கு ஆளாகி உள்ளன.

இந்த சங்கடமான சூழ்நிலையில், மேலும் ஒரு அடி கொடுத்திருக்கிறது பத்திரிகைகளுக்குக், குலாம் சர்க்கார்.

அதாவது, சர்க்கார் அதிகாரிகள் எந்தத் தகவலையும், பத்திரிகை நிருபர்களுக்கு அறிவிக்கக் கூடாது எனப் புதிய விலங்கு பூட்டி விட்டிருக்கிறது காஷ்மீர் அரசாங்கம்.

"பத்திரிகை நடைபெறுவதற்காகத் தேவைப்படும் உரிமை மீது அடிப்படைத் தாக்குதல் நடத்துவதாக இருக்கிறது இத்தடை" என்று பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் கருத்தறிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை உரிமைகளைக் குறைத்துவரும் ஏற்பாடுகளை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டுமெனவும் தீர்மானம் ஒன்று நிறைவேறி இருக்கிறது மேற்படி கூட்டத்தில்.

**200 தொழிலாளர்கள் கைது**

ஜெய்பூர் நகர சபையைச் சேர்ந்த 200 பேர் அவசர சர்க்கார் சட்டப்படி கைது செய்யப்பட்டனர்.

## மாபாரத பாதையில் இராமாயண வெளியீடு

### எட்டேகால் லட்ச ரூபாயில் ஆண்டுச் செலவில் புதுமுறை நூல்!

பரோடா பல்கலைக் கழகத்திலுள்ள கீழ்நாட்டுக் கலை ஆராய்ச்சி மன்றம், வால்மீகி இராமாயணத்தை நுணுகி ஆராய்ந்து, புதிய முறையில் ஒரு வெளியீட்டைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதற்காக 8,25,000 ரூபாய் செலவழிக்கவும் திட்டமிட்டுள்ளது.

பூனாவில் உள்ள பந்தார்கர் கீழ்நாட்டு ஆராய்ச்சி மன்றத்தினர், மாபாரதத்தை வெளியிட கையாண்ட முறையை, முன் மாதிரியாகக் கொண்டு, இந்த இராமாயண ஆராய்ச்சியும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1951-லேயே இதற்கான முயற்சி துவக்கப்பட்டு விட்டதாம். மொத்தம் ஒன்பது ஆண்டுகளில், இம் முயற்சி முழு வெற்றி பெறும் எனக் கணக்கிடப்படுகிறது.

பல விற்பன்னர்கள், கீழ்நாட்டு கலைத்துறை நிபுணர்கள், ஆகியோரின் ஒத்துழைப்பு, புதிய ஆராய்ச்சி இராமாயணத்திற்கு தேவைப்படுகிறதாம்.

சுருதிக் கிடக்கும் கையேட்டுப் பிரதிகளை திரட்டும் பணிக்கு இரண்டாண்டு தேவையாம். ஏப்ரல் திங்களில் இவ்வேற்பாடு தொடங்கப்பட்டதாம்.

இந்த இராமாயண புதுமுறை வெளியீட்டிற்காக, அமெரிக்கர் ஒருவர், பிரெஞ்சு நாட்டவர் ஒருவர், ஜெர்மன் நாட்டவர் இருவர் ஆக நான்கு வெளிநாட்டவர், உள்நாட்டு ஆராய்ச்சியாளருடன் சேர்ந்து பணியாற்றுகின்றனர்.

### நிலவுடமைப் புள்ளி விவரம் சேகரிக்க

இந்திய சர்க்கார் உத்தரவு

ஒவ்வொரு ராஜ்யத்திலும் உள்ள நிலங்களின் உடமை பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்குமாறு இந்திய சர்க்கார் கேட்டிருக்கின்றனர்.

இந்தியா முழுமையும் ஒரே விதமான நிலச் சீர்திருத்தக் கொள்கை வகுக்க இப்புள்ளி விவரங்கள் இந்திய சர்க்காருக்கு உதவும் எனத் நம்பப்படுகிறது.

ஆந்திர சர்க்கார் உடனே நிலப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பர் எனத் தெரிகிறது.

### ஜப்பான் தேயிலைத் தோட்டங்கள்

கதிர் இயக்கத்தால் பாதிக்கப்பட்டன

பறவைகளுக்கும் அதே கதியாம்!

டோக்கியோ, ஜூன் 15— ஜப்பானில் தேயிலை தோட்டங்கள் ரேடியோ கதிர் இயக்க மழையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

பக்குவம் செய்யப்பட்ட தேயிலையிலும், மயிலும் ரேடியோ கதிர் இயக்கம் காணப்படுவதாக நிபுணர்கள் ஆராய்ச்சிக்குப் பின்னர் கூறுகின்றனர்.

இதன் மூலம் தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்படும் என்று ஜப்பானிய வர்த்தகர்கள் அஞ்சுகின்றனர்.

கியோடோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், வடமேற்கு ஜப்பானில் உள்ள சில பறவைகள் கதிர் இயக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

பிணியைச் சுற்றி கதிர் இயக்கம் காணப்படுவதாக ஜப்பானிய அணுசக்தி ஆராய்ச்சிக் குழுவினர் கூறுகின்றனர்.

## சமஸ்கிருதம் தேசிய மொழி ஆக வேண்டுமாம்!

### பிணியினும் பயங்கரமான பரிகாரம்!

தேசிய மொழியாக இந்திக்குப் பட்டம் கட்டியதை எத்தனையோ அறிஞர்கள் கண்டித்துள்ளனர். அதை ஆதரிக்கும் முறையில் சமஸ்கிருத வெறியர்கள் சிலர் இந்திக்குப் பதில் சமஸ்கிருதத்தையே தேசிய மொழியாக்கலாம் என்று கூறுகின்றனர்.

இவர்கள் தங்கள் கோரிக்கைக்கு கூறும் வாதம், கடுமையான நோய்க்கு அதைவிடக் கடுமையான பரிகாரம் சொல்வதைப் போன்றதாக உள்ளது.

வடமொழியை தேசிய மொழியாக்கப் பிரச்சாரம் செய்யும் அவ்விக் கழகத்தினர் ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனிடம், மொழியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நாட்டைப் பிரிக்காமல், நிர்வாக வசதியை ஒட்டியே நாட்டைப்பிரிக்குமாறு அறிக்கை ஒன்று தந்தனர்.

சமஸ்கிருத மொழிதான் இந்தியாவின் தேசிய மொழியாக வேண்டுமென்றும், அப்போதான் இந்தியாவில் உள்ள எல்லா மாகாணங்களிலும் மக்கள் இரண்டு மொழிகளைக் கற்க வாய்ப்பு கிடைக்குமென்றும், இந்தியைத் தேசிய மொழியாக்கினால், இந்தி மொழி பேசும் மாகாணங்கள் ஒரே மொழியை கற்பதுடன் நின்றுவிடுமென்று அவர்கள் கூறுகின்றனர்.

மேலும், இந்தியாவில் சமூபது சதவிகித மக்கள் இந்தி மொழி பேசுவதில்லை என்பதை அவர்கள் அறிக்கை சுட்டிக்காண்பிக்கிறது.

## இதோ! உம் படைப்பு! ஏற்றுக்கொள்ளும்!'



அன்பளிப்பு : 'சங்கர்ஸ் வீக்லி'

★

## ஒரு கேள்வி?

★

வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தலில், உழைப்பாளர் கட்சி அபேட்சகர்களை நிறுத்தி வைக்குமா? அல்லது காங்கிரஸ் நிறுத்தும் ஆட்களுக்கு ஆதரவு தேடுமா?

அடுத்த பொதுத் தேர்தலில் உழைப்பாளர் கட்சியின் நிலைமை என்ன?

★

## வேலூர் அழைக்கிறது! வீரர்காள்! வாரீர்! ஜூன் 26—27

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—6—54 செவ்வாய்

# உரிமையுடன் கேட்கிறோம்!

ஓராண்டு முடிந்தது—இவ்வளவு விரைவிலா என்று எவரும் வியக்கத்தக்க முறையிலே, ஓராண்டு உருண்டோடிவிட்டது—'நம் நாடு' இரண்டாம் ஆண்டு எனும் புதிய மைல் கல் அருகே நிற்கிறது—பயணம் மீண்டும்—இலட்சியபுரி நோக்கி.

ஓராண்டுக்கு முன்பு 'நம் நாடு' துவக்கப்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் முகமெலாம் மலர்ந்தது, மகிழ்ச்சி வழிந்தது. 'நமக்கோர் வாள்! நயவஞ்சகத்தைத் துளைத்திட ஒரு வேல்! கபடரின் சூதுக் கோட்டைகளைத் தாக்கிட ஓர் சம்மட்டி!' — என்று அன்புடன் அழைத்தனர்; ஆர்வத்துடன் வரவேற்றனர்; 'நம் நாடு' திராவிடப் பெருங்குடி மக்களின் எழுச்சிக்கும் விழிப்புக்கும் சான்றளிக்கும் எழிலேடு ஆயிற்று; ஓராண்டுப் பயணம் இனிது நடைபெற்றிருக்கிறது!

ஓராண்டுக்கு முன்னர் துவக்கப்பட்ட 'நம் நாடு' இதழ் கொள்கை காக்கும் வீரனாகத் திகழ்ந்து, திராவிடத் திருப்புகழ் இசைத்து, சுவையும் பயனும் அளித்தது என்றால், அதன் பொருட்டு, திராவிட மக்கள் தமது பாராட்டுதலை வழங்க வேண்டியது, 'நம் நாடு' அலுவலகத்தில், மிகக் குறைந்த அளவு ஊதியம் பெற்று, திறம்பட பணிபுரிந்து வருபவர்களுக்குத்தான்!

கருத்தோவியம் தீட்டுபவர்களிலிருந்து கணக்கு தீட்டுபவர் வரையில், கருவியைக் காத்திடுவோரிலிருந்து கட்டுகளை ஒழுங்காக்குவோர் வரையில், 'நம் நாடு' வளர்ச்சியைத் தமது குறிக்கோளாகக் கொண்டு, அயராது பணியாற்றினர்; அவர்தம் உழைப்பைக் கொண்டுதான் 'நம் நாடு' ஓராண்டுக் காலத்தைச் செவ்வனே முடித்துக்கொண்டு, மேலால் ஏறுநடை போட்டுச் செல்லும் தகுதியும் திறமையும் பெற்றிருக்கிறது.

துவக்கும்போது கூறியது போலவே, 'நம் நாடு' கழகக் கருத்திதழ் எனும் குறிக்கோளுடனேயே இந்த ஓராண்டுப் பணியாற்றப்பட்டது. பெரும் மூலதனமும் பெருஞ் செலவும் துணை நிற்க, உலகமெங்கும் எழுத்தாளர்களைக் கண்டறிந்து, அவர்கள் மூலம் சேதிகள் திரட்டிக்குவித்துத் தரும் பிற இதழ்களோடு, வண்ணமும் வகைவகையான ஓவியங்களும் மிளிரும் வண்ணம் வெளிவரும் பிற இதழ்களோடு, 'நம் நாடு' போட்டியிட இயலாது—போட்டியிட வேண்டிய அவசியமும் கிடையாது என்பதை முன்னரே வலியுறுத்தியுள்ளோம். நம் நாடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்திதழாகவே திகழும் என்று அறிவித்தோம்—அந்தக் கடமையைப் பொறுப்புணர்ச்சியுடன் நிறைவேற்றி வந்திருக்கிறோம் என்ற திருப்தியுடனேயே இரண்டாம் ஆண்டு செல்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம், கேலி பேசுவோரும் கலகம் மூட்டிவிடுவோரும், திரித்துரைப்போரும் வலுச்சண்டைக்கு இழுப்போரும் சூழ நின்றுகொண்டிருக்கையிலேயே, வளர்ந்துகொண்டு வரும், மகத்தான சக்தி.

தி. மு. கழகம் மாற்றார்களின் எதிர்ப்பையும், உற்றார் உறவினராக இருக்க வேண்டியவர்களே, வேறு தேடுவோராகிவிட்ட காரணத்தால் அவர்களின் தொல்லையையும் ஒருசேரக் கண்டு, வெகுண்டெழாமல், அதேபோது வேகத்தைக் குறைத்துக்கொள்ளாமல், ஏசலின் சுமையடாமல், அதே போது வீசப்படும் மாசுகளைத் துடைத்துக்கொண்டு, பகை மூட்டாமல், பண்பு இழக்காமல் பணியாற்றித் தீரவேண்டிய கடினமான பாதையிலே செல்லும் நிலையில் இருக்கிறது. இதற்குத் துணை புரியும் விதமாகவே 'நம் நாடு' அமைந்திருக்கிறது, என்பது அனைவரும் அறிந்ததே — அந்தக் கடமையை ஓராண்டு காலம் தளராது செய்து முடித்ததால் ஏற்பட்ட களிப்பும் வலிவும், மேலால் செல்ல வேண்டிய பயணத்துக்கு ஆர்வமூட்டுவதாக அமைந்திருக்கிறது.

'நம் நாடு' துவக்கப்பட்டபோது, தி. மு. கழகத்தின் மடலாக மட்டுமே சிலகாலம் பணியாற்றும் என்று நம்பினோம்—ஆனால் நாட்டு நிலைமையோ, துவக்கப்பட்ட உடனேயே, 'நம் நாடு' திராவிட முரசாகிவிடும் வாய்ப்பைத் தந்தது.

மும்முனைப் போராட்டம்! அதற்கு 'நம் நாடு' முரசு!!

எங்கும் அறப்போர்! அதற்கு எக்காளமிடும் வீரச் சங்கமாயிற்று 'நம் நாடு'!!

எத்தனையும் பாசறைகள்! அவைதமை அமைத்திடும் ஏற்புடை பாணியாயிற்று, 'நம் நாடு'!!

எந்த இதழுக்கும், இது போன்ற வாய்ப்பு, இவ்வளவு விரைவிலே கிடைத்ததில்லை—எந்த இதழும், கிடைத்த வாய்ப்பு காரணமாக ஏற்பட்ட பெரும் கடமையை இவ்வளவு திறம்பட ஆற்றியதுமில்லை, என்று கூறத்தக்க வகையிலே ஓராண்டு இருந்திருக்கிறது.

ஆச்சாரியாரின் ஆணவத்தை அழித்தொழிக்கும் அறப்போர் பாசறையாகவும் பணியாற்றி இருக்கிறது 'நம் நாடு.'

சுக்கொல் வீசிய நேருபண்டிதருக்கு அரும் பாடம் காட்டிய வீரத் திராவிடர் மேற்கொண்ட அறப்போரை உலகுக்கு எடுத்துக்காட்டும் வீர விளக்காயிற்று 'நம் நாடு.'

எத்தனை எத்தனை வீரக் காதைகளைத் தாங்கி வந்தது!

திராவிடம் போர்க்கோலம் பூண்டு நின்ற காட்சியினை, கோழைகளையும் வீரனாக்கும் வண்ணம் எடுத்துத் தீட்டி, எழுச்சியை வளரச் செய்தது; எண்ணத்திலே ஓர் உயர்வும், செயலிலே ஓர் சீலமும் ஏற்படச் செய்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொலிவும் வலிவும் எழிலுறத் தெரியச் செய்யும் அரும் பணியாற்றியது 'நம் நாடு.'

இவ்வளவுக்கும், 'நம் நாடு' இதழைச் சூழ்ந்துள்ள இடுக்கண்களோ, ஏராளம்.

பெரியதோர் அச்சுப் பொறி! அது பேச மறுக்கிறது!

கண்ட கண்ட காரியங்களுக்கெல்லாம் மின்சாரம் நல்கும் சர்க்கார்—நமக்கு இதுவரை அந்த வாய்ப்பினைத் தந்தாரில்லை!

'நம் நாடு' அளவு பெரிதாகி அகில உலகச் செய்திகள் தாங்கி வெளிவர இயலாத நிலை இருப்பதற்குக் காரணம்—சர்க்காரிடமிருந்து நமக்கு மின்சார வசதி இன்னும் கிடைக்காததுதான்.

இச்சூழ்நிலையை மேலும் தொல்லையுடையதாக்குவது போலத் தோழர்கள், 'நம் நாடு' இதழின் வளர்ச்சி, அதன் அளவு பெரிதான பிறகு கவனிக்கப்பட வேண்டிய பிரச்னை என்று எண்ணிவிடுகிறார்கள். வளர்ச்சியிலே ஏற்பட்டிருக்கும் குந்தகம், மகிழ்ச்சியை மட்டுப்படச் செய்திடுமோ என்று அஞ்சுகிறோம்.

'நம் நாடு' இதழின் வளர்ச்சியின் அளவு—சர்க்காரின் அக்கறையற்ற தன்மையையும் போக்கையும் மாற்றும்—இதனைத் தோழர்கள் உணர வேண்டும்.

அளவு பெரிதாகட்டும், வளர்ச்சி அதுபோது எப்படியும் ஏற்பட்டுவிடும் என்று எண்ணுவது, பெரிதும் கேடு விளைவிக்கும் போக்காகும் என்பதை மட்டும் கூற விரும்புகிறோம்.

ஓராண்டுக் காலமாக 'நம் நாடு' இதழின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அனைவருக்கும், நன்றி கூறிக் கொள்கிறோம்.

ஆதரவைத் தொடர்ந்து அளிப்பர்—மேலும் ஆர்வத்துடன் அளிப்பர் என்ற நம்பிக்கையுடன், இரண்டாம் ஆண்டு நுழைகிறோம்.

'நம் நாடு' இதழின் சில தனிச் சிறப்புகளை எண்ணி எடுத்துக் காட்டுவது பொருந்தும் என்று நம்புகிறோம்.

தோழர்கள் 'நம் நாடு' இதழின் வளர்ச்சிக்காக ஆர்வத்துடன் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் உரிமை எமக்கு உண்டு; காரணம்! 'நம் நாடு'—பத்து இதழ்களோடு ஒன்று, என்பதல்ல நிலைமை—நம் நாடு' தனியான சில சிறப்புகள் கொண்டது—

1 மற்ற பத்திரிகைகள் உலகச் செய்திகளைத் தாங்கி வரும்—நம் நாடு' அவைகளைத் தொகுத்து, நமது இலட்சியத்துக்குத் தொடர்பு படுத்தித் தரும்; செய்தியுடன் கருத்தும் இழைக்கப்படுகிறது.

2 தலைப்புகள் பிரமாதமாக எல்லா இதழ்களிலும் இருக்கும் — 'நம் நாடு' தலைப்புகள் மூலமும், திராவிடரின் கருத்தோட்டத்தைக் காட்டி வரும்.

3. தி. மு. கழகத் தோழர்களின் பேச்சு பிற இதழ்களில் வரும்—பாயப் பூட்ட. 'நம் நாடு'தான், அந்தப் பேச்சுக்களின் சுவையும் கெடாமல், தர்மத்தையும் தலைகாட்டாமல், வெளியிட இயலும் — அதிகாரபூர்வமாக.

4. தி. மு. கழகப் பேச்சாளர்களின் பேச்சைப் போட்டு, அலங்காரம் காட்டும் பிற இதழ்கள்—'நம் நாடு'தான், தி. மு. கழகத்தின் எல்லாக் கிளைகளின் நடவடிக்கைகளையும் வெளியிட்டு, கழகத்தின் முழுப்பொலிவையும், வலிவையும் காட்ட முடியும்.

5. நாட்டிலே நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகள் எல்லா இதழ்களிலும் வெளிவரும் — ஆனால், 'நம் நாடு'தான், அந்த நிகழ்ச்சிகள் குறித்து, திராவிட முன்னேற்றக் கழகக் கருத்து என்ன என்பதை எடுத்து விளக்கும் — ஏனெனில், 'நம் நாடு' கழக ஏடு.

6. தி. மு. கழகத்தின் மீது பிறர் சாட்டும் குற்றச் சாட்டுகளையும் வெளியிட்டு, மக்களைக் குழப்பும் பிற இதழ்கள்—'நம் நாடு'தான், அந்தக் குற்றச் சாட்டுகளின் பொய்த்தன்மையை எடுத்து எழுதும்.

7. சந்தோஷம் பிறக்காத கழகச் செய்திகளை வெளியிட்டும், கோயம் வந்தால் இருட்டடிப்புச் செய்தும் வரும் பிற இதழ்கள்—தி. மு. கழக வரலாறு தொடர்ச்சியாகத் தெரிய வேண்டுமானால், 'நம் நாடு'தான், உங்கள் ஏடு.

8. தி. மு. கழக வளர்ச்சியின் அளவுகோலாக இருப்பது 'நம் நாடு'

9. திராவிட நாடு பிரிவினை பிரச்னை சம்பந்தமாக, ஆராய்ச்சிகளும் அறிவுரைகளும், பிற இதழ்களில் காணக் கிடைக்கா—'நம் நாடு'தான் இவைகளைத் தரும்.

10. பிற இதழ்கள் செய்தித் தாள்கள்; 'நம் நாடு' தான் கருத்திதழ்.

எனவே, 'நம் நாடு' உங்களிடம் நிச்சயமாக இருக்க வேண்டும். திராவிட நாடு வேண்டுவோர் கருத்துக்கு விருந்தாகவும், கரத்தில் ஆயுதமாகவும் இருப்பது 'நம் நாடு.' இதை மறவாதீர். இன்றே 'நம் நாடு' உங்கள் இல்லம் வர ஏற்பாடு செய்யுங்கள். 'நம் நாடு' வளர்ச்சி, தி. மு. கழகத்தின் வளர்ச்சி.

## மலான் தோல்வி!

கேப் டவுன், ஜூன் 14—தென் ஆப்பிரிக்கப் பார்லிமெண்டில் கருப்பர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கக் கோரும் மலானின் அரசியல் மசோதா பார்லிமெண்டின் இரு சபைகளும் அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளுக்கு 9 வாக்குகள் குறைவாகப் பெற்று தோற்றுவிட்டது.

## செய்திக்கதிர்

### வேலை நிறுத்தம் வாபஸ்

சென்ற 17 நாட்களாக நடைபெற்றுவந்த கேஹூர் பீடித் தொழிலாளர் வேலை நிறுத்தம் தொழிலாளர்களுக்கு வெற்றியுடன் வாபஸ் பெறப்பட்டது. உண்ணாவிரதம் இருந்த நான்கு தொழிலாளிகளும் வேலைக்குச் செல்வார்கள் என்று தெரிகிறது.

☆

### கண்காட்சி

ஸ்டால் சொந்தக்காரர்களின் கோரிக்கை சம்பந்தமாக திருச்சி நகரசபையுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையில் திருச்சி நகராட்சி மன்றத்தினர் நடத்தும் பொருட் காட்சியில் பல 'ஸ்டால்கள்' மூடப்பட்டன என்றும் பொருட்காட்சிக்கு வந்திருந்த மக்கள் இதன் காரணமாக ஏமாற்றம் அடைந்தனர் என்று தெரிகிறது.

☆

### உணவு மண்டலங்கள்

சென்னையில் உள்ள உணவு மண்டலங்களை ரத்து செய்ய இந்திய சர்க்கார் ஒப்புதல் அளித்துவிட்டார்களாம். ஜூலை 1-ம் தேதி முதல் ராஜ்யத்தில் எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் உணவுப் பொருள்களை அனுப்பலாம் என்று தெரிகிறது.

☆

### தபால் சர்வீஸ்

அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள பனிப் பிரதேசங்களில் தபால்களைத் துரிதமாக அனுப்ப முதல் முதலாக ஹெலிகாப்டர் சர்வீஸ் ஒன்று தபால் தந்தி இலாகாவால் ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது.

☆

### தியாகி நிலம்

அருகதையற்ற தியாகிகள் எல்லாம் விரும்பத்தகாத முறையில் நிலத்தைப் பெற்றிருக்கின்றனர் என்றும் அவர்களிடமிருந்து அந்த நிலங்களின் பாத்யதை பறித்துக் கொள்ளப்படும் என்று ஆந்திர முதல் அமைச்சர் பிரகாசம் அறிவித்தார்.

☆

### வைத்தியக் கல்லூரி

மதுரையில் ஜூலை மாதம் ஆரம்பமாகும் வைத்தியக்கல்லூரி ஒன்றுக்கு சென்னை சர்வ கலாசாலை அங்கீகாரம் அளித்துவிட்டதாகவும் 50 மாணவர்களுக்கு அக்கல்லூரியில் இடம் கிடைக்கும் என்றும் தெரிகிறது.

☆

### அரிசி ஏற்றுமதி

வெளி நாடுகளுக்கு உயர்ந்த ரக அரிசி 10,000 டன் அனுப்ப ஆந்திர சர்க்கார், இந்திய சர்க்காரிடம் அனுமதி கேட்டிருக்கிறது.

☆

### அமைதி

ஏஜென்சி நிலைமையை ஆந்திர சர்க்கார் கவனித்து வருவதாகவும், அந்தப் பிரதேசத்தில் அமைதியைப் பாதுகாக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்று ஆந்திர அமைச்சர் சஞ்சீவி ரெட்டி கூறினார்.

☆

### தூதுக்குழு

மூன்று நாட்களாக சென்னையில் தங்கியிருந்த தாய்லாந்து வர்த்தகத் தூதுக் குழுவினர் கொழும்புவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

☆

### உற்பத்தி

இந்தியாவின் தேசிய உற்பத்தி 1953-ம் ஆண்டில் 4 முதல் ஐந்து சதவீதம் அளவில் உயர்ந்திருக்கிறதாம்.

# மறைந்த மாவீரன் வேலாயுதம் திருமகள் மணவிழா



★

மங்கையர்க்கரசி—ராமச்சந்திரன் திருமணம்

★

## தி.மு.க. சார்பில் ஆயிரம் ரூபாய் அன்பளிப்பு

அரசியல் விரோதம் காரணமாக படுகொலைக்கு ஆளான ஆசிரியர் உடையார்பாளையம் வேலாயுதம் அவர்களின் திருமகள் மங்கையர்க்கரசிக்கும் திருவளர் செல்வன் ராமச்சந்திரனுக்கும் 13—6—54 காலை, ஜெயங்கொண்டத்தை அடுத்த கரடிக்குளம் கிராமத்தில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

தோழர் பூவராகசாமி எம். பி. தலைமை வகித்தார்.

இயக்கத் தோழர்கள் ஏராளமானவர்கள் கூடியிருந்து மணமக்களை வாழ்த்தினர்.

மணமக்கள், தங்கள் வாழ்க்கை ஒப்பந்தம் பற்றி மன்றத்தார் முன்பு எடுத்துரைத்து மாலை மாற்றிக்கொண்டு, திருமணத்தை இனிது நடத்திக்கொண்டனர்.

தலைமை வகித்த தோழர் பூவராகசாமி அவர்கள், சீர்திருத்த திருமணச் சிறப்பை எடுத்துக் கூறிவிட்டு, மணமக்களை வாழ்த்தினர்.

தமிழாசிரியர் பொன்னம்பலம் அவர்கள் பண்டைத் தமிழர் நெறி குறித்துப் பேசிவிட்டு மணமக்கள் நீடுழி காலம் இனிதே வாழ்க என்று வாழ்த்தினர்.

மற்றும் தோழர்கள் அ. பொன்னம்பலனார், சி. என். அண்ணாதுரை, மு. கருணாநிதி, தோழியர் செல்லக்கண்ணம்மாள், கே. கே. நீலமேகம், தருமலிங்கம், ஜி பராங்குசம் ஆகியோரும் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

பெரியார் ஈ. வே. ரா. அமைச்சர் எல். என். ராமசாமி, திருக்குறள் முனுசாமி, விசுவநாதம் எம். எல் ஏ., பாவலர் பாலசுந்தரம், திருவாரூர் தங்கராசு, சிற்றரசு, அணைக்கரை தங்கராசு ஆகியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்தன.

மறைந்த மாவீரன் வேலாயுதம் அவர்களின் குடும்பத்தாருக்கு தக்க சமயத்தில் கூடுமான அளவு பொருளுதவி செய்வதாக, தி. மு. கழக துவக்கத்தின் போது பொதுச் செயலாளர் வாக்களித்தபடி, இத்திருமண நிகழ்ச்சியின்போது மணமகளாரிடம் தி. மு. கழகச் சார்பில் ஆயிரம் ரூபாய் அன்பளிப்பைத் தோழர் அண்ணாதுரை அளித்தார். தி மு கழகத் தோழர்கள் சிலரிடம் மட்டுமே வசூல் செய்யப்பட்டது; வேறு சிலர் வாக்களித்துள்ளனர்; அதனையும் எதிர்பார்த்து, ஆயிரம் ரூபாய் அன்பளிப்பாகத் தரப்பட்டது.

இதில் தோழர்கள் அண்ணாதுரை ரூ. 200, நடிகர் எம். ஜி ராமச்சந்திரன் ரூ 200, மு. கருணாநிதி ரூ 200, ஈ வெ. கி. சம்பத் ரூ 100 தி. மு. க. தலைமை நிலையம் ரூ 100, நடிகர் எஸ் எஸ் ராஜேந்திரன் ரூ 50, எஸ். எஸ். பி. லிங்கம் ரூ 50 தந்துள்ளனர்.

திருமண விழாவில் கூடியிருந்தோரும், வாழ்த்துரை வழங்கினோரும், மறைந்த வேலாயுதனாரின் தொண்டுகளைப் பாராட்டிப் பேசினர்.

## பயிரிடாத விளைநிலம் பறிமுதல்

### பம்பாய் அரசாங்கத்தின் நடவடிக்கை

சூரத், ஜூன் 14—

133 ஏகா பயிரிடும் நிலங்களை விவசாயம் செய்யாது வைத்திருந்ததால் நிலப் பிரபுக்களிடமிருந்து பிடுங்கி நிலமில்லாத 45 விவசாயிகளுக்கு பம்பாய் அரசு தந்துள்ளது.

இந்த நிலங்கள் மாந்தி தாலுக்காவில் உள்ளவை.

சென்ற ஜூலையில்சர்க்கார், நிலப் பிரபுக்களை, விவசாயம் செய்யாத இந்த நிலங்களை ஏன் பறிமுதல் செய்யக் கூடாதென கேட்டிருந்தனர். அந்நேரத்திலேயே பி.சோ. க்கள் இந்த நிலங்களைப் பறிமுதல் செய்து நிலமற்ற விவசாயிகளுக்கும் பிரித்துத் தரக்கோரி அறப்போர் ஒன்றும் நடத்தினர்.

பம்பாய் குடிவாரச் சட்டம் 65-ம் பிரிவின்படி பம்பாய் அரசால் இந்த நில விநியோகம் நடைபெற்றுள்ளது.

## 910 பேர் கைது

கிழக்கு வங்கத்தில் கவர்னர் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து இதுவரையில் மொத்தம் 910 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

## பத்திரிகை ஆசிரியர் விடுதலை

கராச்சியில் அகமதியா நீதிமன்றம் சிரேட்டும் நேற்றுடன் பாகிஸ்தான் பாதுகாப்புச் சட்டப்படி இதுமுதல் தேதியன்று கைது செய்யப்பட்ட கராச்சி பத்திரிகையான 'டான்' இதழின் உதவி ஆசிரியர் அகமது ஹாசன் விடுதலை செய்யப்பட்டார்.

## உத்திர பிரதேசத்தில புதுமுறை கல்வி திட்டம்

### சமஸ்கிருதம் கலந்த இந்தி போதிக்கப்படுமாம்

அலகாபாத், ஜூன் 12—

உயர்நிலைப்பள்ளி வகுப்புகளுக்கும் இன்டர் மீடியேட் வகுப்புகளுக்கும் புதிய கல்வித் திட்டமொன்றை உத்திரப் பிரதேச கல்வி போர்டு தயாரித்திருக்கிறது

ஆங்கிலமும், இராணுவக் கல்வியும் விருப்பப் பாடங்களாக இக்கல்வித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

உயர்நிலைப் பள்ளிகளில இரண்டு மொழிகள் கட்டாயமாக்கப்படும். சமஸ்கிருதத்துடன் சேர்ந்த இந்தி மொழியும் இந்தி அல்லாத இந்திய மொழி ஒன்றையோ அல்லது வெளிநாட்டு மொழி ஒன்றையும் கட்டாயமாகப் படிக்க வேண்டுமாம்.

இந்த இரண்டு கட்டாய மொழியுடன் கணிதமும் கட்டாய பாடமாகும்.

இன்டர் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கும் மொழியைப் பற்றியவரையில் மேற்சொன்ன முறையே கையாளப்படும் என்று தெரிகிறது.

இந்தத் திட்டம் 1956-ம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும் என்று தெரிகிறது.

## தானியக் கிடங்குகள் கட்ட அமெரிக்க உதவி

புதுடில்லி, ஜூன் 14—

உணவு தானியங்களைக் கையிருப்பில் சேமித்து வைப்பதற்காக போதிய களஞ்சியங்களைக் கட்ட வசதி அளிக்கும் பொருட்டு ஒப்பந்தம் ஒன்று இந்தியா—அமெரிக்கா இடையே கையெழுத்தாயிற்று; இதற்காக அமெரிக்கா 15,39,000 டாலர் தரும் என்றும், இந்திய மேற்சொன்டு ரூ 15 லட்சம் செலவு செய்து 10 லட்சம் டன் உணவு தானியங்களைச் சேகரிக்கப் போதுமான களஞ்சியங்களைக் கட்டுமென்றும் தெரிகிறது.

## ஏழைகளுக்கு உதவி

### நிஜாமின் தாராளம்

ரூ 5 கோடி டிரஸ்டு ஏற்படுத்துகிறார்

ஹைதராபாத்திலும், வெளியிலும உள்ள ஏழைகளுக்கு உதவும் பொருட்டு ரூ. 5 கோடி உள்ள தர்ம டிரஸ்டு ஒன்றை நிஜாம் ஏற்படுத்தியுள்ளார்.

மக்களின் கல்வி, வைத்தியம், பொது முன்னேற்றம் ஆகியவைகளுக்காக இந்த நிதி பயன்படும் என்று நிஜாமின் பொருளாதார ஆலோசகர் தாரா பூர்வாலா அறிவிக்கிறார். ஆண்டுதோறும் இந்த நிதியின் மூலம் கிடைக்கும் ரூ 25 லட்சம் ஜாதி மத வேறுபாடு இன்றி ஏழைகளுக்கு உதவப் பயன்படுமாம்.

## மந்திரியைக் காண தொழிலாளர் ஊர்வலம்

பெங்களூரில் உள்ள 27 பட்டுத் தொழிற்சாலையைச் சேர்ந்த 1000 பேர் ஊர்வலமாகச்சென்று மாநில சட்ட இலாகா மந்திரியைக் கண்டனர்.

தங்களுக்கு, பஞ்சப்படி ரூ 20-ம், தினச்சம்பளம் ரூ $1\frac{1}{2}$-ம, விடுமுறை நாட்கள் பலவும், வருடாந்திர தினச் சம்பள உயர்வு இரண்டணாவும் வேண்டுமென்ற கோரிக்கைகளை மந்திரியிடம் தந்துள்ளனராம்.

# உலக அரங்கில்

**அங்காரா :**

துருக்கி, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் இராணுவப் பிரதிநிதிகள் கூடிப் பேசி இரண்டு நாடுகளுக்கும் இடையே ஏற்படப்போகும் இராணுவ ஒப்பந்தத்துக்கான விவரங்களைத் தயாரிப்பார்கள் என்று தெரிகிறது. துருக்கியின் ஜனாதிபதி சிலல் பேயாரும், மெண்டர்சும் பாகிஸ்தானுக்கு வருமாறு கேட்ட பாகிஸ்தானின் அழைப்பை ஏற்றுக் கொண்டனர் என்று தெரிகிறது.

★

**பான் :**

ஜப்பானிய தொழில் அமைச்சர் சென்டாரோ கொசாகா, தன் நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடி காரணமாக, தனது பிரிட்டன், ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்தை ரத்து செய்துவிட்டார் என்று ஜப்பானிய தூதராலய அதிகாரி ஒருவர் கூறினர்.

★

**பிரேக் :**

செக் கோஸ்லாவாகியாவின் கம்யூனிஸ்டு சர்க்கார் இந்த ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் நாட்டில் உள்ள ஆண்-பெண்களின் அனைவரிலும், 3,20,000 பேரை நிலங்களில் வேலை செய்யுமாறு செய்ய இருக்கின்றனர் என்று பிரதம மந்திரி சிரோகி கூறினர்.

★

**ஆம்ஹார்ஸ்ட் :**

"என்றைக்குமே உலகம் இரு பிரிவுகளாக இருப்பது கூடாது; அந்தப் பிளவு உணர்ச்சியை வளர்க்கும்படியான செயல்களை உலகினர் யாரும் செய்யக் கூடாது," என்று ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசி ஹாமர்ஸ்க்ஜோல்டு கூறினர்.

★

**லண்டன் :**

கிழக்கு ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் படையின் தளபதியான ஜார்ஜ் எர்ஸ்கின் கென்யாவிலிருந்து லண்டன் வந்து சேர்ந்தார் கென்யாவில் கலகக்காரர்களை அடக்க அதிகமான பொருள் உதவி பெறவே அவர் அங்கே வந்திருக்கிறார்.

* * *

வாஷிங்டனில் நடைபெற்ற தென் கிழக்கு ஆசிய இராணுவ மாநாடு மிகவும் பயனுள்ளதாகும் என்று அம்மாநாட்டில் கலந்துகொண்டு தாய் நாடு திரும்பிய பிரிட்டிஷ் அதிகாரி மார்ஷல் ஜான் ஹார்டிங் லண்டன் விமான நிலையத்தில் கூறினர்.

★

**ஜார்ஜ்டவுன் :**

லண்டனில் உள்ள இராணுவ இலாகாவிற்கும் பிரிட்டிஷ் கயானாவின் கவர்னர் ஆல்பிரட் சாவேஜுக்கும் இடையேகருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறதாம். வழக்கத்திற்கு விரோதமாய் அவசரகால பிரிட்டிஷ் படையை கயானாவில் பிரிட்டன் வைத்திருப்பது பற்றியே கருத்து வேற்றுமை ஏற்பட்டதாம்.

★

**டோக்கியோ :**

ஜூன் 4-ம் தேதி பண்டு ஆரம்பமாகவிருந்த ஜப்பானியப் பிரதமர் யோஷிடாவின் உலக சுற்றுப் பயணம், வருகிற வேனிற்காலம் வரையில் ஒத்திப்போடப்பட்டிருக்கிறது.

★

**வாஷிங்டன் :**

அமெரிக்கா என்றுமே காலனி ஆதிக்கம்வேண்டுமென்று போராடாது. அமெரிக்கா என்றுமே காலனி ஆதிக்க முன்னணி நாடு அல்ல. என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டல்லஸ் கூறினர்.

**கார்டூம் :**

சூடான் பாதுகாப்பிலாகா அமைச்சர் கலாபல்லா காலிட் ஜூலை 31-ம் தேதிக்குள் சூடான் இராணுவத்தில் உள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குப் பதில் சூடானியர்களையே நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார். இதற்காக தனிக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★

**நியூயார்க் :**

கண் நோயினால் பாதிக்கப்பட்ட 16 வயதுடைய டென்சில் என்னும் இந்தியச் சிறுவன் ஒருவன் சிகிச்சைக்காக நியூயார்க்கிற்கு விமான மூலம் சென்றான். தனது நோய் பற்றி இச்சிறுவன் அமெரிக்க ரேடியோ அதிகாரி ஒருவருக்கு கடிதம் ஒன்று எழுதினான் என்றும், அதன் பிறகே அப்பையனின் சிகிச்சைக்கு மதகுரு ஷீமென் என்பவர் ஏற்பாடு செய்தாராம்.

* * *

வருகிற புதன்அன்று ஐ. நா. பாதுகாப்பு சபை இந்தோ சீன எல்லையில் ஐ. நா. பார்வையாளர்களை அனுப்ப வேண்டுமென்ற தாய்லாந்தின் கோரிக்கையைப் பரிசீலனை செய்யும் என்று தெரிகிறது.

★

**சைகோன் :**

பிரெஞ்சு மந்திரி சபையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் இந்தோ-சீனாவுக்குத் தேவையான அவசரத் துருப்புகளை அனுப்புவது தாமதமாகிறது என்று சைகோனில் உள்ள இராணுவ அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

★

**அம்மான் :**

ஜோர்டானுக்கு வந்துள்ள சவுதி அரேபிய மன்னர் சாடினை எதிர்த்து முஸ்லிம் சகோதரத்துவ கட்சியினர் இரண்டு மணி நேரம் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள்.

★

**வின்ஸ்டர் :**

வின்ஸ்டர் அரண்மனையில் பிரிட்டிஷ் அரசி இரண்டாவது எலிசபெத் ஐரோப்பிய நாடுகளில் மிகப் பெருமை வாய்ந்த வீர விருதான 'ஆர்டர் ஆப் தி கார்டர்' என்ற பட்டத்தை பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலுக்கு அளித்தார்.

★

**கெய்ரோ :**

சமீபத்தில் எகிப்து, சவுதி அரேபியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தப்படி, சவுதி அரேபியத் துருப்புகளுக்கு இராணுவப் பயிற்சி அளிக்க, எகிப்திய இராணுவ தளபதிகள் செல்வார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

★

**கொழும்பு :**

இந்திய சர்க்கார் அதிகாரிக்கும் சென்னை முதல் அமைச்சர் கே. காமராஜுக்கும் இடையே நடைபெறும் இலங்கை-இந்தியப் பேச்சுவார்த்தைகளில் உதவியாக இருக்கும் பொருட்டு இலங்கை இந்திய கமிஷனரின் முதல் காரியதரிசி வி. சித்தரத் சென்னைக்கு வருவார் என்று தெரிகிறது.

★

**இஸ்தான்புல் :**

அங்காராவிலிருந்து திரும்பும் பாக முதல் அமைச்சர், துருக்கிக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நூற்றாண்டு காலமாக நட்பு உள்ள தென்றும், பத்து மணி நேரத்தில் இரு நாடுகளிடையே பறந்து செல்ல முடியுமென்று கூறினர்.

# பாக் அநீதிகளுக்கு ஆதரவு காட்டிய சர்க்கார்!

## இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு காட்டாதது ஏன்?

### தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அப்பாவு சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்; விவரம்

மதுரை, ஜூன் 10—

"ஆச்சாரியார் முதலமைச்சர் பீடத்திலிருந்து வெளியேற நேரிட்டதும், பின்னர் வந்த முதலமைச்சர் புதிய கல்வித் திட்டத்தை ஒழித்ததும் திராவிட மக்களுடைய வெற்றி ஆகும்."

—என்று, பெரியகுளத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் குறிப்பிட்டார்.

6—6—54 மாலை 6 மணிக்கு பெரியகுளம் பெரியார் திடலில், தி. மு. கழகப் பொதுக் கூட்டம் புதிய கல்வித் திட்டம் ஒழிந்த வெற்றிவிழாப் பொதுக் கூட்டமாக நடந்தது. மதுரை தோழர் கே. என். ராசமான் தலைமை வகித்துப் பேசினார். பின்னர், தோழர்கள் அப்பாசாமி, என். பி. சாமி, மேத்தா, என். அப்பாவு ஆகியவர்கள் கழகக் கொள்கைகள் குறித்துப் பேசினர்.

தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் பேசுகையில், வடநாட்டு சர்க்கார் ஆரியன் துறையில் தென்னாட்டு மக்களை புறக்கணிக்கின்றார்கள் என்பதை ஆதாரத்தோடு எடுத்துக்காட்டி, இன்று இலங்கையில் வாழும் 10 லட்சம் மக்களும் தமிழர்கள் என்பதால்தான் நேரு சர்க்கார் அவர்களை கவனிக்க மறுக்கின்றார்கள் என்பதைக் கூறி, இலங்கையின் பிரதமர் கொத்தலாவல அங்குள்ள மக்களை—10 இலட்சம் தமிழர்களை நோக்கி, "அங்கள் நாட்டை விட்டு வெளியேறுங்கள்; நீங்கள் இந்த நாட்டுப் பிரஜைகள் அல்ல; நீங்கள் கடற்றவர்கள்; வெளியேறுங்கள்; வெளியேற மறுத்தால் ரேஷன் கார்டு தரமாட்டேன்; உணவு கிடைக்காமல் நீங்கள் இலங்கை சுடுகாட்டுக்குத்தான் போக நேரிடும்," என மிரட்டுகிறார் என்று குறிப்பிட்டார்.

"இலங்கையில் இருக்கும் இந்திய சர்க்காரின் அதிகாரியை இவ்வளவு காட்டமாக அங்கிருந்த தமிழர்களை இந்தியப் பிரஜைகள் என பதிவு செய்து கொண்டு வந்தார்கள்; இலங்கை அமைச்சர் இவர்களை 'சட்டத்தை மீறி வந்தவர்களை வெளியேற்றுங்கள்' என்று சொல்லுகின்ற இந்தச் சமயத்தில், அங்கு வதிகின்ற தமிழர்களை, இந்த இந்திய சர்க்காரின் அதிகாரமைப்பும், இந்தியப் பிரஜைகள் என பதிவு செய்வதை நிறுத்திவிட்டது. இனி அவர்கள் நிலை என்ன? அவர்களைப் பாதுகாப்பது, அவர்களுக்கு வாழ்வளிப்பது யார்?' என்று கேட்டார். மேலும் அவர் சொன்னார்:—

"இலங்கை வாழ் 10 இலட்சம் தமிழர்களை கவனிக்க மறுக்கிற நேரு சர்க்கார், இந்த 7 ஆண்டு காலமாக மற்றொரு காரியத்தைச் செய்து வருகின்றார்கள்; இலங்கை எப்படி நமக்கு அன்னிய அரசோ, அப்படி நமக்கு பாகிஸ்தான் அன்னிய அரசுதான். பாகிஸ்தானில் வாழ்ந்துவந்த பாக். குடிமக்களை வடநாட்டு இந்துக்கள் தான்—அந்த வழி முறையில்லை—முஸ்லிம் ராஜ்யத்தில் இருக்க பிடிக்கவில்லை என தாங்களாகவே வெளியேறி, இந்திய எல்லைக்கு வந்தவுடன், அவர்களை வரவேற்று, அவர்களுக்கு இந்திய பிரஜா உரிமையோடு அகதிகள் என்ற அந்தஸ்தும் தந்து, அகதிகள் புனர் நிர்மாணத் திட்டம் என்கின்ற பெயரால் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து வருகிறார்கள். இன்றைக்கும் வருடமொன்றுக்கு 70 கோடி ரூபாய், 80 கோடி ரூபாய் 100 கோடி ரூபாய் என செலவு செய்கின்றார்கள்.

"பாகிஸ்தானிலிருந்து தாங்களாகவே வெளியேறிய வடநாட்டுக்காரர்களுக்கு வாழ்வளிக்கும் நேரு சர்க்கார், இலங்கையில் வாழும் தமிழர்கள்—10 இலட்சம் பேர்—சட்டப்படி இந்தியப் பிரஜைகளாக இருந்தும் இவர்களுக்கு வாழ்வளிக்க, ஆதரவு தர முன்வராததேன்? இலங்கையிலிருந்து விரட்டப்பட இருக்கிறவன் தென்னாட்டுக்காரன் என்பதால்தான்! பாகிஸ்தானிலிருந்து தாங்களாகவே வருகின்ற மக்களுக்கு நேரு சர்க்கார் வாழ்வளிப்பதன் காரணம் அவர்கள் வட இந்திய மக்கள் என்பதால்தான்!

"எனவே இலங்கைவாழ் 10 இலட்சம் தமிழர்களைப் பாதுகாக்க, அவர்களுக்கு வாழ்வளிக்க, திராவிடத் தனி அரசு சர்க்காரால்தான் முடியும்: எனவே திராவிடத் தனி அரசு ஏற்பட நீங்கள் எல்லாம் ஆதரவு தாருங்கள்," என பேசி முடித்தார்.

### கட்டபொம்மு மாணவர் படிப்பகம்

#### 4-வது ஆண்டுவிழா பொதுக் கூட்டம்

கல்லிடைக்குறிச்சி, ஜூன் 10—

29—5—54ல், மேற்படி படிப்பக ஆண்டு துவக்கவிழா பொதுக் கூட்டம் கோவில்குளம் தோழர் சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் கா. மா. கா. மரகதம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் க. அன்பழகன் விரிவுரையாற்றுகையில் திராவிட நாடு பிரிவினையின் அவசியத்தை விளக்கினார்; உலக மக்கள் தமிழை வரவேற்றுக் கொண்டிருக்கையில், அதை மதியாத இயக்கத்தினர்தான் என்றார்; இந்நாட்டு மக்களின் வாழ்விலே உண்மையான நாட்டம் கொண்டவர்கள் தி. மு. கழகத்தினர்தான் என்று விளக்கினார்; ஊழ் செயலாளியின் கண்ணீர் வடித்து நின்ற நிலையில் கொஞ்சம் பொருட்படுத்தாமல் வை கொடுத்ததும், புயலால் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற ஓடோடி வந்ததும் தி. மு. கழகம்தான் என்று குறிப்பிட்டார், இறுதியில், நீதி மன்றங்களிலும் சட்டசபையிலும் பிரமாணம் எடுத்துக் கொள்வதற்கு குறளை உபயோகிக்கலாம் என்று கோரினார், வள்ளுவர் இறந்த நாளை "திருவள்ளுவர் திருநாள்" என ஒரு நாளை விடுமுறையாக அளிக்கும்படி சர்க்காரை வேண்டிக்கொள்ளும் தீர்மானம் மற்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### முதியோர் பள்ளி ஆண்டு விழா

காஞ்சிபுரம், ஜூன் 11—

6—6—54ல், மேலபிள்ளையார் பாளையம் நகராட்சி முதியோர் பள்ளி ஆண்டுவிழா திரு. எல். சி. தீக்ஷிதர் தலைமையில் நடைபெற்றது. மாணவர்களால் "புதிய பாதை" என்ற நாடகம் நடைபெற்றது. திரு. கே. ராமலிங்கம் மாணவர்களுக்குப் பரிசுகளும், நற்சாட்சிப் பத்திரங்களும் வழங்கினார்.

## அம்மை நோய்க்கு — மீன் - கருவாடு பத்தியம்!

### நோயை அறிவிக்கத் தவறினால் தண்டனை!

#### இலங்கையில் அம்மை நோய் சிகிச்சை

இலங்கையில் அம்மை நோய் வருவதே இல்லை அப்படி வந்தாலும் இந்தியாவிலிருந்து போனவர்கள் மூலம் வந்து, சில சமயங்களில் மற்றவர்களுக்கும் பரவுவதுண்டு. இவ்வியாதிக்குக் கடுமையான நடவடிக்கைகளை அந்த அரசாங்கம் மேற்கொள்ளுகிறது.

#### தனியாக்கப்படுவர்

இந்த நோய் ஒருவருக்கு வந்தால், அவர் உடனே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும் உடன் அவர் அதற்கென ஸ்தாபிக்கப்பட்டுள்ள வைத்திய சாலைகளுக்கு அப்புறப்படுத்தப்படுவார் அங்கு அவர் மூன்று வாரம் சிகிச்சைப் பெற்ற பின்தான் வெளியேற அனுமதிக்கப்படுவார்.

#### கருவாடு பத்தியம்

சிகிச்சை காலத்தில் மருந்து கொடுக்கப்படுவதோடு ரொட்டி கருவாடு, அல்லது மீன் குழம்புமே ஆகாரமாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வியாதிக்கு இந்த வித ஆகாரமே ஏற்றதாக அவர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

நன்கு பராமரிக்கப்பட்டு சிகிச்சையும் செய்யப்பட்டு, குணமடைந்து வெளியே வருகிறார்கள். இளநீர் வேண்டும்; பால் வேண்டும்; பழம் வேண்டும்; காரம் கூடாது என்றெல்லாம் நாம் சொல்கிறோமே அந்த பத்திய பாகமெல்லாம் அவர்களிடம் கிடையாது.

#### அறிவிக்கத் தவறினால்...

யாரேனும் ஒருவர் வியாதி வந்து சர்க்காருக்கு தெரியப்படுத்தவில்லையானால், அது பின்னர் வெளியானால் அவர்களுக்கு 200 ரூபாய்க்குக் குறையாமல் அபராதம் விதிக்கப்படும். அவர்கள் இருந்த வீடும் பூட்டப்படும். சில சமயங்களில் வீட்டுக்காரரும் உடந்தையாயிருந்ததாகக் கருதி அவருக்கு அபராதம் விதிக்கப்படும். இந்த வியாதியும் காலரா விஷயமாகவும் இலங்கை சர்க்காரின் கெடுபிடி மிகத் தீவிரமானது அதனாலேயே இலங்கையில் எந்த பாகத்திலும் இந்த வியாதிகள் வருவதுமில்லை; வந்தால் பரவுவதுமில்லை.

#### இடத்தை சுத்தி செய்தல்

இந்த வியாதி கண்டவர் அப்புறப்படுத்தப்படுகிறார். பின்னர் அவர் இருந்த வீடு, வெந்நீர், பிலீச் புகை இவைகளால் சுத்தம் செய்யப்பட்டு, சில நாள் பூட்டியும் வைக்கப்படுகிறது. கிராமாந்திர பகுதியாயிருந்தால் அந்தத் தெரு முழுவதுமே காலி செய்யப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு, சிலநாள் குடியேறுமல் தடையும் விதிக்கப்படுகிறது. 1, 2 கேசுகளுக்கு அதிகமாக ஒரு கிராமத்தில் ஏற்பட்டுவிட்டால் அக்கிராமமே காலி செய்யப்பட்டு சில நாள் யாருமே குடியேறாமல் தடை செய்யப்படுகிறது.

### ஆரியன் தியாகிகளுக்கு நிலம்!

#### ஆந்திர சர்க்கார் மீண்டும் புனராலோசனை செய்யும்!

கர்னூல், ஜூன் 13—

ஆரியன் தியாகிகளுக்கு நிலம் அளிப்பது பற்றி ஆந்திர சர்க்கார் மீண்டும் பரிசீலனை செய்வார்கள் என்று தெரிகிறது. ஆனால் புதிய மனுக்கள் எதையும் ஏற்றுக்கொள்ளும் நோக்கத்தில் ஆந்திர சர்க்கார் இல்லை என்று தெரிகிறது.

தியாகிகளுக்கு அளிக்கப்பட்டு பட்டா செய்யப்படாத நிலங்களை பட்டா செய்து கொடுக்க சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

தியாகிகளுக்கு நிலம் அளிப்பதை ரத்து செய்தபோது சர்க்காரிடம் தங்கியுள்ள மனுக்களை இப்போது சர்க்கார் பரிசீலிக்கும் என்று தெரிகிறது.

### ஒத்திவைப்பு

கடலூர் பழைய நகர் 2-வது வட்ட தி. மு. கழகத் திறப்பு விழா தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களால் ஜூன் மாத 2-வது வாரத்தில் நடைபெறும் என செயலாளர் அஜீஸ் தெரிவிக்கிறார்.

### கடலங்குடியில் வெற்றி விழா

10—6—54ல், வேளையகம் மன்றச் சார்பில் தோழர் கே. எம். வஜ்ரவேலன் தலைமையில் குலக் கல்வித் திட்டம் ஒழிந்தது பற்றி தோழர் இரா. பாலகிருஷ்ணன் பேசினார். சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

## ரூ. 2,45 600 பாழ்!

### வேங்கடேசருக்கு வைகுண்ட கையுறை!

திருப்பதி ஜூன் 14—

வெங்கடேஸ்வர சுவாமிக்கு ரூ. 2,45 600 பெறுமானமுள்ளதும், விலையுயர்ந்த கற்கள் பதித்துள்ளதுமான வரதஹஸ்தம் அல்லது வைகுண்ட ஹஸ்தம் (கையுறை) நேற்று அணிவித்தனர்.

இதில், 2,144 வைரங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன; இவை ஒவ்வொன்றும் 230 காரட்டுகள்; இவற்றின் மதிப்பு ரூ 1,80,000.

47 காரட்டுகள் கொண்ட 97 பச்சை நிற மாகதங்களும் உள்ளன; இவைகளின் விலை ரூ 12,000.

50 காரட்டுள்ள 212 ரூபி என்ற கற்களும் இருக்கின்றன; இவைகளின் விலை ரூ 1000.

இந்தக் கையுறை ரூ 44,100 பெறுமான 490 எடையுள்ள தங்கத்தால் செய்யப்பட்டிருக்கிறது.

இதைச் செய்வதற்கு கூலி மட்டில் ரூ 6500 ஆயிற்று.

## நிலமற்றோர் — நிலம் பெறுவர்

### ஆந்திர சர்க்கார் முடிவு

பதின்மூன்றரை லட்சம் ஏகர் நிலம், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஆந்திர அரசாங்கத்தால் பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில் உள்ள நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இரண்டரை ஏகர் நஞ்செய் நிலமும், ஐந்து ஏகர் புஞ்செய் நிலமும் தரப்படும்.

இந்த முடிவை ஆந்திர மந்திரி சபை மேற்கொண்டது.

ஆறே மாதங்களில் நில விநியோகம் முடிவடைந்துவிடும்.

நிலம் பெறுபவர்கள் நிலத்தை விற்கக்கூடாது என்றும், நிலம், தங்களாலேயோ அன்றி தங்கள் நேரடியான மேற்பார்வையிலேயோ கட்டாயம் பயிர் செய்விக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் தரப்படும் என்றும் தெரிகிறது.

## வேலையின்மைக்குப் — பல-தொழில் பயிற்சிப் பள்ளி

### ரூ. 250 கோடி செலவிடப்போகிறதாம் சர்க்கார்!

பிகானீர், ஜூன் 14—

ரூ 250 கோடி செலவில் 500 பல-தொழில் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்க யூனியன் அரசு திட்டமிட்டிருக்கிறது; ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தப் பள்ளி நிறுவப்படும்; இந்தப் பள்ளிகளில் தரப்படுகிற கல்வியும், தொழிற் பயிற்சியும், நாட்டில் நிலவும் வேலையின்மையைப் போக்க உதவும் என நினைக்கிறேன்."

—இவ்வாறு மத்திய அரசாங்க கல்வி இலாகா செயலாளர் ஹுமாயூன் கபீர் இங்கு அறிவித்தார்.

அவர் மேலும் சொன்னார்:—

"1947-ல் பள்ளி செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை 30 சத விகிதமாயிருந்தது; 1952-ல் 40 சத விகிதமாக உயர்ந்துள்ளது: ஆனாலும், இது அவ்வளவு திருப்திகரமான முன்னேற்றம் என்பதற்கு இல்லை. இந்திய அரசியல் சட்டப்படி பத்தாண்டு காலத்தில் நாட்டினர் எல்லோருக்கும் நாம் கலவியறிவு தரவேண்டும்;

"சர்க்கார் கல்வி வளர்ச்சிக்காக கடந்த ஆண்டுகளில் நிறையப் பணம் செலவு செய்துள்ளது: தனிப்பட்டவர்கள் இத்துறையில் போதுமான ஆர்வம் காட்டவில்லை 1947ல் 80 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவு செய்த அரசாங்கம் 1952ல் 130 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது; ஆனால், தனிப்பட்டவர்கள் கல்வி வளர்ச்சிக்குச் செய்து வந்த உதவி 1947-ல் 27 கோடி ரூபாயாக இருந்தது 1952-ல் 30 கோடியாக மட்டும்தான் உயர்ந்துள்ளது."

"ஆகவே, நாட்டின் நல்லறிவாளர்கள் எல்லாம், கல்வி வளர்ச்சிக்கு தாராளமாக உதவ முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்," என்று குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழக அச்சக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, ... நாராயண செட்டித் தெரு, திருவல்லிக்கேணி) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.